# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஜனவரி-பெப்ரவரி 2018)

## DT/S 2123 Dance and Music for Theatre

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி-II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

### பகுதி–I

01. "சுவைபட வந்தன வெல்லாம் ஓர் இடத்தே வந்ததாக வெளிவரும் கலை வடிவமே நாடகமாகும்"
    (அ) நாடகம் ஒரு கூட்டுக் கலை வடிவம் என்பதனை நீர் ஏற்றுக்கொள்கிறீரா காரணம் தருக?
    (10 புள்ளிகள்)
    (ஆ) நாடகத்தில் இசையின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்துக?
    (10 புள்ளிகள்)

02. நாடகத்துக்கான இசை நெறியாளர் ஒருவரை அமர்த்தும் பொழுது ஏற்றுக்கொண்ட நாடகப் பிரதியில் இசை அமைப்பு என்பது முக்கியமானதாகின்றது.
    (அ) இசை நெறியாளருக்கு இருக்கும் தகுதிகள் யாது? விளக்குக.
    (10 புள்ளிகள்)
    (ஆ) அரங்கிற்கான இசையின் சிறப்பம்சங்கள் யாவை? விளக்குக.
    (10 புள்ளிகள்)

03. மழை அல்லது புதியதொரு வீடு ஆகிய நாடக பாடங்களை மனங்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    (அ) கதைப்பின்னலை வளர்த்துச் செல்ல நாடக ஆசிரியர் கையாண்டுள்ள இசையின் உத்திகளைக் குறிப்பிடுக.
    (10 புள்ளிகள்)
    (ஆ) சம்பவங்களின் ஒழுங்கமைப்பையும், பாத்திரவார்ப்பினையும் கொண்டு செல்ல நாடக ஆசிரியர் இசையில் கையாண்டுள்ள உத்தி முறைகளை விளக்குக.
    (10 புள்ளிகள்)

### பகுதி–II

04. உலகலாவிய நடன வகைப்பாடுகள் சிலவற்றைத் தருக. அவற்றிற் காணப்படும் நடனத்தின் முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துக.
    (30 புள்ளிகள்)

05. ஈழத்தில் பயில் முறையில் பேணப்படும் கிராமிய நடன வகைகள் நாடகத்தில் கையாளப்பட்ட விதத்தினை பேராசிரியர் சி.மௌனகுருவின் "இராவணேசன்" அல்லது பேராசிரியர் எதிர்வீரசரச்சந்திராவின் "மனமே" நாடக படைப்பாக்கத்தினை மனங்கொண்டு விளக்குக.
    (30 புள்ளிகள்)

06. பரத நாட்டிய நடன அசைவுகளை நவீன நாடகப் பயன்படுத்தலில் வரும் சாதக பாதக அம்சங்களை ஆராய்க.
    (30 புள்ளிகள்)

*****